"இறைவனை நினைமின் சரியானவற்றைச் செய்மின்"

# யா/அராலி இந்துக் கல்லூரி

## வருடாந்தப் பரிசளிப்பு விழா

## அதிபர் அறிக்கை

காலம்: 28.11.2002 வியாழன் பிற்பகல் 1.30 மணி
இடம்: கல்லூரியின் பிரதான மண்டபம்

தலைவர்
திரு. வே. மோகனநாதன்
அதிபர், யா/அராலி இந்துக் கல்லூரி

பிரதம விருந்தினர்
திரு. க. இரத்தினம்
(பிரதேச செயலர் வலி.மேற்கு சங்கானை)

சிறப்பு விருந்தினர்
திரு.சி. செல்லையா அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், சங்கானை கல்விக் கோட்டம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

☆ மங்கல விளக்கேற்றல்

☆ இறை வணக்கம்

☆ தமிழ்த்தாய் வாழ்த்து

☆ வரவேற்பு நடனமும் மாலை சூட்டலும்

☆ வரவேற்புரை

திரு. வ. அம்பலநாதன்

☆ கருத்துரை

1. மாணவர் சார்பில்
2. பழைய மாணவர் சார்பில்
3. பெற்றோர் சார்பில்

☆ அதிபர் உரையும் அறிக்கையும்

☆ சிறப்பு விருந்தினர் உரை

☆ பிரதம விருந்தினர் உரை

☆ பரிசில் வழங்கல்

☆ மாணவர் கலை நிகழ்ச்சிகள்

☆ நன்றியுரை

திரு.அ. ஜெயக்குமார் (பகுதித் தலைவர்)

☆ கல்லூரிக் கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/அராலி இந்துக் கல்லூரி
## வட்டுக்கோட்டை
## பரிசளிப்பு விழா - 2002
## 28.11.2002

இன்றைய விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும் பெருமதிப்பிற்குரிய வலி மேற்கு பிரதேச செயலாளர் திரு இரத்தினம் அவர்களே,

விழாவின் சிறப் விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் அன்பிற்கும் மதிப்பிற்குமரிய சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.சி.செல்லையா அவர்களே,

எமது பாடசாலை ஆசிரியர்களே அயற் பாடசாலை அதிபர்களே ஆசிரியர்களே பெற்றோர்களே பாடசாலை அ.ச.உறுப்பினர்களே பழைய மாணவர்களே நலன் விரும்பிகளே மாணவ மாணவிகளே இவ்விழாவிற்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் வணக்கம்.

சென்ற ஆண்டு இப்பாடசாலையின் அதிபராக 4 ஆண்டுகள் கடைமையாற்றிய திரு.ம. மகாதேவா அவர்கள் தமது அறுபதாவது அகவைப் பூர்த்தி செய்து சேவையில் ஓய்வு பெற்றுள்ளார். இப் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக தம்மையே அர்ப்பணித்துப் பாடுபட்டதோடு தரம் 1 செயற்பாட்டறை புதிய இரு மாடிக் கட்டிடம் நூல்நிலையம் , பாடசாலைப் பெயர்ப்பலகை என்பவற்றைப் பெற்றுத் தந்ததோடு சில புனரமைப்பு வேலைகளையும் செய்து இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும் தொண்டாற்றியமையை நாம் என்றும் மறந்துவிடலாகாது. அவரைத் தொடர்ந்து திரு. வே.மேகனநாதன் ஆகிய நான் 28.11.2001 முதல் இப் பாடசாலையின் அதிபராகக் பொறுப்பக்களை ஏற்றுக்கொண்டேன்.

இப் பாடசாலை மாணவர் தொகை அதிகம் கொண்ட தரம் II கல்லூரியாகும் இக் கல்லூரியின் அடைவு மட்டம் எதிர்பார்த்தளவு வெற்றியளிக்காது இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனைக் கடந்த ஆண்டறிக்கையிலும் காணக்கூடியதாக உள்ளது. இதற்குப் காரணம் மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வராமை, நேரம் தவறிய வரவு மெல்லக் கற்கும் இயல்பு, கற்ற பாடங்களை மீட்டல் செய்யாமை, ஒப்படை வேலைகளைச் செய்து கொண்டு வராமை இவற்றை நிவர்த்தி செய்வதற்கு பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல் நடைபெற்று பெற்றோரும் பிள்ளைகளின் அன்றாடக் கற்றல் நடவடிக்கைகளை அவதானித்து ஊக்கமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டபோதும் அதில் →

பெற்றோர் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இதற்காக மேலதீக வகுப்புக்கள் விசேட செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கல்வித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டு வரும் மொழித்திறன் விருத்தித் திட்டத்தின் மூலம் படிப்படியான முன்னேற்றம் காணப்படுகின்றது. தரம் 5 இல் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கும் மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்பட்டு வந்தன.

கடந்த காலங்களில் க.பொ.த சதாரணதர பரீட்சைப்பெறுபேறுகள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் என்பவற்றை நோக்கும்போது அடைவு மட்டம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. ஏதிர் காலத்தில் நல்ல பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்கு கற்பித்தல் செயற்பாடுகள் செம்மையான முறையில் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படுவதோடு மாணவர்கள் கற்றல் நடவடக்கைகளில் அதிக அக்கறை கொண்டு நோக்கத்தை அடைய திடசங்கற்பம் பூண்டு கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். பெற்றோரும் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் தீவிர அக்கறை காட்டினால் எமது பாடசாலை கல்வியில் எதிர்பார்த்த பலனை பெற்றுக் கொள்ள முடியும்

2001 ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரணதர பரீட்சையில் செல்வி வி.மீரா என்பவர் பாடசாலை மட்டத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளார் இவருக்கு எமது பாராட்டுக்கள். 2002ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில்பரீட்சையில் இப்பாடசாலையில் எவரும் சித்தியடையவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயாமாகும். மாணவர்களை கல்வியில் ஊக்குவிக்கும் முகமாக க.பொ.த (சா/த) பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் சிறந்த பெறுபேற்றை பெறும் மாணவர்களுக்கு இப்பாடசாலையில் முன்னாள் ஆசிரியர் அமரர். கி. நெல்லிநாதன் அவர்கள் ஞாபகார்த்தமாக வருடம் தோறும் ரூ.2000 ரொக்கப்பரிசாக வழங்கிவரும் அவரது குடும்பத்தினர்களுக்கும் எமது நன்றியை கூறிக்கொள்கின்றேன்.

இது போன்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு ரூபா 500.00 ரெக்கப்பரிசாக ஆண்டுதோறும் அமரர் சி.மயில்வாகனம் அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கிவரும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் வளம்

எமது பாடசாலையில் தரம் 1முதல் 11வரை வகுப்புக்களில் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள் இவ்வாண்டில் 150 மாணவர்கள் வன்னிப்பிரதேசத்தில் இருந்து திரும்பவும் வந்து சேர்ந்துள்ளார்கள். தற்போது மொத்தம் 625 மாணவர்கள் இங்கு கல்விகற்கின்றார்கள்.

## ஆசிரியர் வளம்

எமது கல்லூரியில் மொத்தம் 26 ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் கடமையாற்றி வருகின்றனர். இவர்களில் 22 நிரந்தர ஆசிரியர்களும் 2 பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் ஒ[illegible] பகுதி நேர இயந்திர தொழிநுட்ப ஆசிரியரும் ஒரு [illegible]க்கல்வி தொண்டர் ஆசிரியரும் ஒரு கடல்வளபாட [illegible]ண்டர் ஆசிரியரும் அடங்குவர்.

## ஆ[illegible]ரியர் இடமாற்றமும் வரவும்

திருமதி இ. இராஜராஜன் சங்கீத ஆசிரியர் அவர்கள் இவ்வாண்டு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவரது இடத்திற்கு திருமதி. கோ.வேலாயுதபிள்ளை அவர்கள் வந்து இணைந்துள்ளார். இப்பாடசாலையில் கடமையாற்றி இடம்பெயர்ந்த நிரந்தர ஆசிரியர் திரு.ப.அம்பலநாதன் அவர்கள் திரும்பவந்து ஆசிரியர் குழாமில் இணைந்துள்ளார்.

## ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

பாடசாலையில் ஆசிரியர் நலன்புரிச்சங்கம் சிறந்தமுறையில் இயங்கிவருகின்றது. அதன் தலைவராக திரு த.சிவகுமாரன் ஆசிரியரும் செயலாளராக திருமதி.ப புவனேஸ்வரன் ஆசிரியரும் பொருளாளராக திருமதி வ.பாலச்சந்திரன் ஆசிரியரும் இணைந்து சிறந்த முறையில் நிர்வகித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவப் பங்களிப்பு

வகுப்புக்கள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தரம் 1 தொடக்கம் தரம் 5 வகுப்புக்களைக் கொண்ட பிரிவுக்கு பகுதித் தலைவராக திருமதி தே. திருவாதவூரர் கடமையாற்றி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளையும் ஒழுங்கு நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்து வருகின்றார்.

தரம் 6 - 11 வரையான வகுப்புக்களுக்கு திரு. ஆ.ஜெயகுமார் பகுதித்தலைவராக கடமையாற்றி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மாணவர் ஒழுங்கு நடவடிக்கைகளை சிறந்த முறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்கி மேற்பார்வை நடவடிக்கைகளையும் கவனித்து வருகின்றார். இவரே பாடசாலையின் உப அதிபராகவும் கடமையாற்றுகின்றார்.

## பௌதீக வளம்

பாடசாலையில் வகுப்பறை கற்பித்தலைச் சிறந்த முறையில் மாணவர்கள் கிரகித்துக் கொள்வதற்கு வகுப்புக்கள் அறைகளாக பிரிக்கப்பட்டிருத்தல் அவசியம் தேவையாகும் இதற்குத் தரம் 1-6 வரையான வகுப்புக்களே பொருத்தமான முறையில் அமைந்துள்ளது. தரம் 7-11 வலையிலான வகுப்புக்கள் பலவருடங்களாக திறந்த மண்டபத்திலேயே நடைபெற்று வருகின்றது எனவே இதனை அறைகளாக அமைப்பதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பாடசாலை அ.ச. உறுப்பினர்கள் பழைய மாணவர்கள். நலன் விரும்பிகள். பொது அமைப்புக்கள் என்பவற்றின் உதவியையும் ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம். மேலும் அடுத்த ஆண்டில் எமது பாடசாலைக்கு பல வகுப்பறைகளை கொண்ட புதிய மாடிக் கட்டடம் ஒன்றினை அமைத்துத் தருவதாக கூறியுள்ளர் அத்துடன் பாடசாலை மின்னிணைப்பு வேலைகளை செய்து தருவதற்கு பாரதி விழையாட்டுக் கழகத்தினர் முன்வந்துள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஒரு விஞ்ஞான ஆய்வு கூடம் இப்பாடசாலைக்கு அதிமுக்கிய தேவையாக உள்ளது மைதான விஸ்தரிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் நிரந்தர உதைபந்தாட்ட கோல் கம்பங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மைதான விஸ்தரிப்புக்கு நிதியுதவி வழங்கிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம். இப் பாடசாலையின் பழைய மாணவராகிய திரு .எம். மாதனராஜ் என்பவர் இப்பாடசாலை வளர்ச்சி நிதிக்கு 14428 ரூபா வினை யேர்மன் நாட்டிலிருந்து அனுப்பி உதவியுள்ளார். அவருக்கும் எமது பாடசாலையின் சார்பில் நன்றியைக் கூறுகின்றோம் இவரைப்போல் வெளிநாடுகளில் பணிபுரியும் இப்பாடசாலையின் மற்றைய பழைய மாணவர்களும் நிதியுதவி செய்ய முன்வரவேண்டும். இதற்கு பழைய மாணவர்களின் பெற்றோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

விளையாட்டு துறையில் எமது பாடசாலை மாணவர்கள் குறிப்பிட்ட திறமையைக் காட்டி வருகின்றனர் என்பது யாவரும் அறிந்த உண்மை விழையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு சிறந்த பயிற்சியை வழங்கி ஒத்துழைப்பு நல்கிய விளையாட்டு துறை பொறுப்பாசிரியருக்கும் குழுவினருக்கும் பயிற்சி அளிக்க உதவிய மாணவர்களாகிய திரு மதன், திரு தயானந்தன் ஆகியோருக்கு பாராட்டுக்கள். வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகளை சிறந்த முறையில் நடாத்தி முடிப்பதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.

பாடசாலையில் இந்து மாமன்றம் தமிழ் இலக்கியமன்றம் விஞ்ஞான கணித மன்றம் வணிக மன்றம் ஆங்கில மன்றம் என்பவற்றை பொறுப்புடன் வழிநடாத்தி செயற்படுத்திவரும் மன்றங்களின் பொறுப்பாசிரியருக்கும் குழுவினர்களுக்கும் நன்றியைக் கூறுவதோடு இம்மன்றங்கள் மாணவர்களுக்கு பயனளிக்க கூடிய வகையில் அதன் நடவடிக்கைகளை விரிவு படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் திரு ம.பரமேஸ்வரன் அவர்களது திறமையும் ஆற்றலும் முகாமைத்துவ நடவடிக்கைகளைச் சிறப்புற செயற்படுத்த பெரும் உறுதுணையாக உள்ளது. ஆலுவலக பணியாளராக கடமையாற்றும் திரு க. இரத்தினசிங்கம் அவர்கள் அலுவலக பணிகளை சிறப்புற நிறைவேற்ற பல வழிகளிலும் தன்னால் இயன்ற சேவைகளை ஆற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

## அவசிய தேவைகள்

எமது பாடசாலையின் இரவு நேர காவலாளியாக தமது சேவையை சிறப்புற செய்து வந்த திரு ந. தர்மராசா அவர்கள் தை மாதத்தில் இடமாற்றம் பெற்று வேறு பாடசாலைக்கு சென்றுள்ளார். அவ்வெற்றிடம் இதுவரை நிரப்பப்படாமலே உள்ளது. இப்பாடசாலைக்கு ஒரு இரவு நேர காவலாளி நியமிக்கப்படவேண்டியது ஒரு அத்தியாவசிய தேவையாக உள்ளது.

அடுத்து எமது பாடசாலையில் தளபாடம் பெருமளவில் பற்றாக்குறையாக உள்ளது. இக்குறைபாடு உடனடியாக நிவர்த்தி செய்யப்படவேண்டியுள்ளது. இதனைக் கருத்திலெடுத்து பிரதேச செயலாளர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன். நிறைவேறாது உள்ள இருமாடி கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்படவேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகூறல்

இக்கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தேவைகளை, நிறைவேற்றி தந்துதவும் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் , உதவிக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை உத்தியோகத்தர் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியினை இப்பாடசாலைச் சமூகத்தின் சார்பில் கூறிக் கொள்கின்றேன்.

குறிப்பாக இப்பாடசாலையின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டி தேவைகளை நிறைவேற்றித்தரும் சங்கானை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு சி.செல்லையா அவர்களுக்கும் சங்கானை கல்விக் கோட்ட ஆசிரிய ஆலோசகர்களுக்கும் எமது பாடசாலை சார்பில் நன்றிகளை கூறிக் கொள்கின்றேன்.

இப்பாடசாலையின் வள்ர்ச்சிக்கு ஆக்கபூர்வமான ஒத்துளைப்புக்களையும் உதவிகளையும் தந்துவரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் யாவருக்கும் எமது பாடசாலை சார்பில் நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.

இவ்விழா சிறப்புற சகல விதங்களிலும் சிறப்பான உதவிகளை தந்துதவியதோடு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றியைக் கூறுகின்றேன்.

நன்றி
வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

வாழிய அராலி இந்துக் கல்லூரி
வாழிய வாழிய வாழியவே
வையக மெங்கும் புகழந்திட எம்மை
வளர் கல்லூரி வாழியவே (வாழிய)

ஈழமணித் திருநாட்டினில் எங்கும்
இலங்கிடும் அறிஞர்கள் ஓங்கும்
சூழிசைக்கழகம் இதுவே என்றும்
துலங்கிடும் கலையகம் இதுவே (வாழிய)

செந்தமிழ் ஆங்கிலம் சேர்ந்து விளங்கும்
திருநிறை கழகமும் இதுவே
எந்தையர் அன்புடன் இனிதுறக்
காத்து ஏத்து கல்லூரி இதுவே (வாழிய)

அழகுக் கலையும் அணியார் நெசவும்
அருள் விஞ்ஞானக் கலையும்
உழவுக் கலையும் ஓங்க நல்கும்
உயர் கல்லூரி வாழியவே (வாழிய)

திங்கள் போலத் திகழ்ந்திடும் கல்விச்
செல்வமளித்திடும் தாயே
எங்கு சென்றாலும் எந்துயர் வரினும்
என்றுந் நின்னலம் மறவோம் (வாழிய)

இனிய நற்கலைகள் நல்கு மராலி
இந்துக் கல்லூரி வாழ்க
இன்பமே சூழந்திட வாழ்க வாழ்க
எல்லோரும் வாழ்ந்திட வாழ்க வாழ்க (வாழிய)

ஆக்கியோன் திரு.கி. நெல்லிநாதன்
(ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org